இமய ஜோதி

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின்
சீரிய கட்டுரைகள், கருத்துகள், கதைகள், நல்லுரைகள், உயர்
கூற்றுகளைத் தாங்கி வரும் மாத இதழ்!

மொழிபெயர்ப்பாசிரியர்:- கி. வானமாமலை,

தியான யோக ரகசியம்.

1. எது தியானம்?

ஒரு பொருள், கடவுள் அல்லது ஆத்மனின் தொடர்ந்த சிந்தனைப் பெருக்கே தியானம், தைலதாரை போன்று கடவுளின் ஒரே எண்ணத்தைச் சதா மனதில் கொள்வதே தியானம். யோகிகள் இதைத் ''தியானம்'' எனத் தெரிவிக்கின்றனர். ஞானிகள் ''நிதித்தியாசனம்'' என்கின்றனர். பக்தர்கள் ''பஜன்'' என்கின்றனர். ஒரு புள்ளி அல்லது பொருளின் மீது மனதை ஒன்றச் செய்வதே ஒன்றித்தல். இதைத் தொடர்ந்து தோன்றி நிற்கிறது தியானம்.

2. தியானத்திற்குறிய தேவைகள்.

1) காலம்

அதிகாலையில் 4-லிருந்து 6-வரை தியானத்தை அப்பியசியுங்கள். இதுவே தியானத்தைப் பயிலுவதற்கான சிறந்த காலம். சிறிதும் தொந்தரவின்றி உங்கள் மனம் பரிசுத்தமாக இருக்கும் பகல் அல்லது இரவின் அந்தப் பகுதியையே தேர்ந்தெடுங்கள். படுக்கைக்குச் செல்லும் முன் நீங்கள் தியானத்தில் அமரலாம். இந்நேரத்தில் மனம் அமைதியுடன் இருக்கும்.

ஞாயிறு நாட்கள் விடுமுறை நாட்களாதலால் மனம் சுதந்திரமாக இருக்கும் அன்று நீங்கள் நன்கு தியானத்தில் ஈடுபடமுடியும். ஞாயிறு நாட்களில் தீவிரத்தியானத்தில் ஈடுபடுங்கள் பால் பழங்களை மட்டும் உணவாகக் கொள்வதாலோ, உபவாசத்தை மேற்கொள்வதாலோ நல்ல தியானம் ஏற்படும். சதா உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தி தியானத்தினுல் பெரும் பயனை அடையுங்கள்

2) இடம்.

உத்தரகாசி: ரிஷிகேசம். பத்ரிநாராயண் முதலிய ஆத்மீகச் சூழ்நிலைகள் ஓங்கி நிற்கும் ஏகாந்தமானதும் குளுமையானதுமோர் இடம் மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்த இன்றியமையாதது. எங்ஙனம் நீரில் உப்பு கரைந்து ஒன்றுகிறதோ, அதேபோல் தன் அதிஷ்டானமான பிரம்மத்தில், தியானுவஸ்தையிலுள்ள மௌன நிலையில், சாத்துவிக: மனம் கரைந்து ஒன்றுகிறது.

தனிமையும் தீவிர தியானமும் ஆத்மானுபூதிக்கான இரு முக்கிய தேவைகள். கங்கை அல்லது நர்மதையின் தீரம், இமாலயத்தோற்றம், அழகிய பூந்தோட்டம் புனிதக் கோவில்கள்-இவையே ஒன்றித்தல். தியானத்தில் மனதை உயர்த்தும் இடங்கள். இவ்வரிய இடத்தையே உங்கள் இருப்பிடமாக்கிக்கொள்ளுங்கள்.

3) ஆசனம்.

சித்தாசனம் அல்லது பத்மாசனம் சரீரத்தை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது; பந்தனங்களும் முத்திரைகளும் உடலை உரப்படுத்துகின்றன. பிராணுயாமம் காயத்தை லோசாக்குகிறது; நாடிசுத்தி மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகிறது. இவ்வரிய தகுதிகளைப்பெற்ற

தும், பிரம்மனிடம் மனதைப் பதியவையுங்கள். அப்பொழுதுதான் தியானம் இலகுவாகவும் சந்தோஷமாகவும் தொடர்ந்து நிற்கும்.

4) தியானத்திற்குதவும் உணவுவகைகள்.

சாத்துவிக உணவை மிதமாக உட்கொள்ளுங்கள் சாதம், காய்கறிகள், பருப்பு, ரொட்டி முதலியவற்றை அதிகமாக உட்கொண்டு வயிற்றைக் கனமாக்கினுல் சாதனை தடைப்படும். சாப்பாட்டுராமன், புலன்வழி நிற்போன், சோம்பேறி முதலியவர்களால் தியானத்தை நன்கு பயில முடியாது. பாலுணவு சரீரத்தை மிக மிக லேசாக்குகிறது. ஒரே ஆசனத்தில் மணிக்கணக்காக உங்களால் உட்காரமுடியும். பலகீனமாகத் தோன்றினுல் ஓரிரண்டு நாள் சிறிது சாதம் அல்லது பால் அல்லது பார்லி அல்லது ஏதாவது சிற்றுண்டியை நீங்கள் உட்கொள்ளலாம். சேவை செய்கின்றவர்கள், மேடைப் பிரசங்கங்கள் நிகழ்த்துவோர் மற்றும் தீவிரமான ஆத்மீகப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் கட்டியான நல்லுணவை நன்கு உட்கொள்வதனுல் தடையில்லை.

* * * * *

3. சிந்தனைக் கலை!

நீங்கள் தியானத்துக்கு உட்காரும்பொழுது, நன்பர்கள், அலுவலக வேலை, மாலையில் நண்பர்கள்—உறவினர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை இவைகளின் நினைவு உங்களைத் தொந்தரவு செய்து, உங்கள் மனதின் கதியை அதிகரிக்கச் செய்யும். திரும்பத் திரும்பப் பிடித்திழுத்து மனதை லட்சியத்தில் நிலை நிற்கச் செய்யவேண்டும். உலகியல் எண்ணங்களை நீங்கள் புறக்கணித்து நிற்க வேண்டும்

அவற்றைச் சற்றேனும் சட்டை செய்யாதீர்கள். இவ்வெண்ணங்களை வரவேற்காதீர்கள் இவ்வெண்ணங்களுடன் உங்களை ஒன்றுபடுத்தாதீர்கள், "இவ் வெண்ணங்கள் எனக்குத் தேவையில்லை. இவற்றுடன் எனக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது;" என்று உங்களுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள். இவ்வெண்ணங்கள் படிப்படியாக மறைந்துவிடும்

மனம் ஒரு குறும்புக்காரக் குரங்கு போன்றது. அதை அன்ருடம் ஒழுங்குபடுத்த வேண்டும். படிப்படியாக அது உங்களுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கும். நடைமுறை அனுபவத்தினுல்தான் நீங்கள் தீய எண்ணங்களை அகற்றி நிறுத்தும் சக்தியைப் பெறுவீர்கள், நடைமுறைப்பயிற்சினுலேயே நல்லெண்ணங்களை மனதில் நிலைத்து நிற்கச்செய்ய உங்களால் இயலும்.

சதா உங்கள் மனதை ஜாக்கிரதையுடன் கண்காணித்து வாருங்கள். விழிப்புடனிருங்கள். பொருமை, கோபம், பகைமை, காமவிகாரம் முதலிய தீய உணர்ச்சிகளை மனதில் தோன்ற அனுமதிக்காதீர்கள். இந்தக் கறுத்த அலைகள் தியானம், ஞானம், சாந்தி, இவற்றின் பெரும் பகைவர்கள். தூய நற்சிந்தனையைக் கொள்வதன் மூலம் இவற்றை உடனேயே அடக்கி நிறுத்துங்கள். பகவந்நாம உச்சாரணம், நற்செய்கை, தீய எண்ணங்களின் விளைவுகளான துன்பங்களை எண்ணி நிற்றல், மனதைத்தூய்மைப் படுத்துதல், எண்ணங்களின் மூல காரணத்தை ஆராய்தல் "நான் யார்" என்ற விசாரம், அல்லது தீய எண்ணங்களை அடக்குவதற்கு உறுதிபூண்ட இச்சா சக்தி முதலியவற்றைக்கொள்வதனுல் நிலை நிறுத்தப்படும் நல்லெண்ணங்கள் மூலமாகத் தீயெண்ணங்களைத் தகர்த்தெரிய

வேண்டும். தூய்மை நிலையை அடைந்ததும் தீய எண்ணங்களே மனதில் முளைக்காது. வீட்டின் வாசலிலேயே பகைவனைத் தடுத்து நிறுத்துவது எளிதென்பதைப்போல், தீய எண்ணம் தோன்றியவுடனேயே அடக்கி விடுவது எளிது. அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். அதை வேர்விட அனுமதிக்காதீர்கள்.

ஆரம்பத்தில், தியானத்திற்கு உட்கார்ந்த உடனேயே எல்லாவிதத் தீய எண்ணங்களும் உங்கள் மனதில் தோன்றி நிற்கும். தூய எண்ணங்களைக்கொள்ள முயற்சிக்கும் நேரத்தில் இது ஏன் ஏற்படுகிறது? இதனால் சாதகர்கள் ஆத்மீக சாதனையைக் கைவிட்டு விடுகின்றனர். ஒரு குரங்கை நீங்கள் விரட்டியடிக்க முனைந்தால், அது உங்களைத் தாக்க முயலுகிறது. இதேபோல் பழைய தீய சம்ஸ்காரங்கள் முதலியவைகளை நீங்கள் கொள்ள முயற்சிக்கும்போது, உங்களைப் பழிவாங்கும் எண்ணத்துடன் தாக்க முற்படுகின்றன, வீட்டைவிட்டு வெளியே விரட்டப்படும் பகைவன் உங்களை எதிர்த்து நிற்பதைப் போன்றதே இது. எதிர்ப்பு நியதி இயற்கையோடமைந்தது. "மனிதனே! கொடுஞ்சித்தமுடையவனகை இராதே! தொன்று தொட்டே உங்கள் மனத்தொழிற்சாலையில் வாசம் செய்ய எங்களை நீங்கள் அனுமதித்துள்ளீர்கள். அங்கு தங்க எஙகளுக்கு சகலவித உரிமையும் உள்ளது. உங்கள் தீச்செய்கைகளில் எல்லாம் இதுவரையிலும் நாங்கள் உங்களுக்கு எவ்வளவு உதவிபுரிந்துள்ளோம்! ஏன் எங்களைத்துரத்திவிடப் பார்க்கிறீர்கள்? நாங்கள் எங்கள் இடத்தைக் காலிசெய்யமாட்டோம்", என்று பழைய எண்ணங்கள் உறுதியுடன் தெரிவிக்கின்றன அதைரியமடையாதீர்கள். தியானப் பயிற்சியைத் தினமும்

ஒழுங்குற அப்பியசியுங்கள். தீயெண்ணங்கள் தானுகவே தொலைந்துபோகும். பிறகு அவை முளைத்தெழவே செய்யாது!

நேரிடை எப்பொழுதும் எதிரிடையை வெல்லுகிறது. இதுவே இயற்கையின் நியதி. எதிரான தீய எண்ணங்களால் நேரிய நல்லெண்ணங்களுக்கு எதிரில் நிற்க இயலாது. தைரியம் பயத்தை வெற்றிகொள்ளுகிறது. சினத்தையும் முற்கோபத்தையும் பொறுமை தோற்கடிக்கிறது. வெறுப்பை விருப்பு தோல்வியடையச்செய்கிறது பேராசைத்தன்மையை பரிசுத்தத் தன்மை வெற்றிகொள்கிறது. தியானத்தின்பொழுது மேல்மனத்தில் ஒரு தீய எண்ணம் தோன்றுகையில், நீங்கள் வருத்தம் சிறிது அடைகிறீர்கள் என்ற உண்மையே நீங்கள் ஆன்மீகத்தில் வளர்ச்சியடைகிறீர்தள் என்பதை உணர்த்துகிறது. அந்நாட்களில் நீங்கள் உணர்ந்தே எல்லாவித தீய எண்ணங்களுக்கும் இடம் கொடுத்தீர்கள். நீங்கள் அவற்றை வரவேற்றுப் போஷித்தீர்கள். உங்களது ஆத்மீகப் பயிற்சிகளை விட்டுவிடாதீர்கள். பிடிவாதமுடையவர்களாகவும் இருங்கள். நீங்கள் வெற்றியையே அடைவீர்கள் என்பது திண்ணம். இடைவிடாது இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு ஜபத்தையும், தியானத்தையும் மத்த நிலையிலிருக்கும் சாதகனெருவன் கூடச்செய்து வருவானேயானுல் தன்னில் வியக்கத்தக்க மாறுதலை அவன் காண்பான் இப்பொழுது இவனுல் பயிற்சியை விடமுடியாது. ஒரே ஒரு நாள் தியானப் பயிற்சியை அவன் நிறுத்துவானுகிலும், அந் நாளில் தான் எதையோ இழந்துவிட்டதைப் போன்று அவன் உணர்வான். அவனது மனம் முற்றிலும் வருத்தத்துடனிருக்கும்.

ஒரு பெரிய கண்ணுடியையும் அதன்முன் ஒரு ரொட்டித் துண்டையும் ஒரு நாய் முன் வைத்தால், கண்ணுடியில் ஏற்படும் அதன் பிரதிபிம்பத்தைப்பார்த்து நாய் குரைக்கிறது. அங்கு மற்றேர் நாய் இருப்பதாக அது தவறுதலாக நினைக்கிறது. இதேபோல ஜனங்களெல்லாரிடத்திலும் தனது மனக் கண்ணுடியின் மூலம் தன் பிரதிபிம்பத்தையே மனிதன் காண்கிருன். ஆனல் நாயைப் போன்று முட்டாள்தனமாக அவர்களையெல்லாம் தன்னிலிருந்து வேறுபட்டவர்களாகக்கருதி பகைமை, பொருமை காரணமாகச் சண்டையிடுகிருன்.

நேர்மையுடன் கூடிய வாழ்க்கையை நீங்கள் நடத்துவீர்களேயானுல் ஆழ்ந்த தியானத்தில் புக உங்களால் இயலும். நல்வாழ்க்கையை நீங்கள் நடத்துவீர்களேயானுல், விவேகம் முதலிய பிற படிகளையும் உங்கள் மனதில் உருவாக்க நீங்கள் முயற்சி செய்யலாம். மன ஒருமைப்பாட்டிற்கு நீங்கள் உங்கள் மனதை விருத்தி செய்யலாம். கடைசியில் தியானத்திலேயே நீங்கள் ஈடுபடலாம். ஒழுக்கமிகும் வாழ்க்கையில் அதிகமதிகம் ஈடுபடுவதாலும், அதிகமாக தியானிப்பதாலும், நிர்விகல்ப சமாதியில் திளைத்து நிற்பதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும், இவ்வரிய நிர்விகல்ப சமாதியால் ஜனன மரணச் சக்கரத்திலிருந்து விடுவித்து நித்தியானந்தம் அமர பதவிக்கு உங்களை அழைத்துச் செல்ல முடியும்.

நன்னடத்தை நியதிகளைக் கைக்கொள்ளாத ஒருவனுடைய மனதில் செய்யப்படும் தியானப் பயிற்சி, மோசமான அஸ்திவாரத்தின்மேல் கட்டப்படும் வீட்டை ஒக்கும் மணலின் மீது நீங்கள் வீட்டைக்கட்டலாம், ஆனல் அது கட்டாயம் கீழே விழுந்துவிடும். ஒழுக்க அடிப்படையில்லை

யெனில் வருடக்கணக்காக நீங்கள் தியானத்திலீடுபட்டாலும் ஒரு பயனும் ஏற்பட முடியாது. நீங்கள் வீழ்ச்சியுறுவது திண்ணம். எனவே, ஒழுக்கப்பயிற்சியின் மூலமாக ஏற்படும் மனத்தூய்மை தியானம், சமாதியில் வெற்றி பெற எண்ணும் ஒருவனுக்கு இன்றியமையாதது. தியானப் பயிற்சியிலீடுபடுவதற்கு முன்னுல் நீங்கள் மிகத் தேவையான நேரிய நல்வாழ்க்கையில் நிற்க முயல வேண்டும். உங்களிடம் நல்லறிவு தோன்றி நிற்கவேண்டும், அப்பொழுதுதான் நீங்கள் தியானத்தில் வெற்றி பெறுவீர்கள். உண்மையான பயிற்சியைவிட மனதை தியானத்திற்குத் தயார் செய்வதில்தான் காலதாமதம் அதிகமாகிறது.

எதிரிடை எண்ணங்களை விரட்டியடியுங்கள். சதா நேரிடை எண்ணங்களைக் கொள்ளுங்கள். நேரிடை எதிரிடையை வெல்லுகிறது. நேரிடையில் நிற்கும்பொழுது நீங்கள் நன்கு தியானிக்கமுடியும்.

மனம் இடையருது புலப்பொருள்களில் வசிக்கும் பொழுது இவ்வண்டம் உண்மையானது என்ற எண்ணம் அதிகரிப்பது சாத்தியமே. மனம் பரம்பொருளை எப்பொழுதும் நாடி நின்ருல் உலகம் ஒரு கனவாகத் தோன்றுகிறது.

மனதின் பயனற்ற பல சங்கல்பங்களிலிருந்தும் நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். இடைவிடாத ஆத்ம விசாரத்தில் ஈடுபடுங்கள். 'இடை விடாத' என்ற பதத்தைக் கவனியுங்கள். இது மிகவும் முக்கியமானது. அப்பொழுதுதான் ஆத்மீக ஞானம் உருவாகும்; சிதாகாசத்தில் ஞான சூரியன் உதயமாவான்.

தேத்தாங்கொட்டையினுல் கலங்கிய நீர் தெளிவடை வதுபோல் வாசனைகளும் பொய்யான சங்கல்பங்களும் நிறைந்த மனதைப் பிரம்மசிந்தனையினுல் தெளியவைக்க வேண்டும், அவ்வமயமே உண்மையான ஆத்மதரிசனம் ஏற்படவழி பிறக்கும்,

இரண்டு முயல்களைத் துரத்திச் செல்லும் மூடமனிதனுல் ஒன்றையும் பிடிக்க முடியாததுபோல், எதிரிடையான இரண்டு எண்ணங்களின் பின் ஓடும் தியானியால் வெற்றியடையமுடியாது பத்து நிமிடங்களுக்குத் தெய்வீக எண்ணங்களும் பிற்பாடு உலகியல் எண்ணங்களும் ஒருவனிடம் தோன்றி நிற்குமானுல், தெய்வீக உணர்வைப்பெறுவதில் அவன் வெற்றியடையமாட்டான். நீங்கள் ஒரே முயலையே பலமாகப்பின் தொடர்ந்து செல்லவேண்டும்; அதை நீங்கள் பிடிப்பது உறுதி. சதா சர்வகாலமும் நீங்கள் தெய்வீக எண்ணங்களையே கொண்டு விளங்க வேண்டும். அப்பொழுதுதான் கடவுளை விரைவிலேயே காணும் வாய்ப்பைப்பெறுவீர்கள்

உப்பு அல்லது சர்க்கரையினுல் தண்ணீரை நீங்கள் பூரிக்கச் செய்வதுபோல், கடவுள், பிரம்மனைப்பற்றிய எண்ணங்களினுலும், தெய்வீகப் புகழ், சீரிய உணர்ச்சியூட்டும் ஆன்மீக எண்ணங்களினுலும் மனதைப் பூரிக்கச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் நிரந்தரமாக நீங்கள் தெய்வீக உணர்வில் நிலைநிறுத்தப்படுவீர்கள்.

நிதித்தியாசனத்தில் நீங்கள் ஸ்வஜாதிய விருத்தி பாவத்தை விருத்திசெய்ய வேண்டியதிருக்கும். இரத்தப் பெருக்கைப்போன்று தெய்வீக சாத்தியத்தின் எண்ணங்களை ஏற்படுத்துங்கள். விஜாதீய விருத்திபாவத்தை திரஸ்காரம் செய்யுங்கள். பொருள்களின் எண்ணங்களை விட்

டொழியுங்கள். விவேகம், விசாரம் என்ற சாட்டையினுல் அவைகளை விரட்டியடியுங்கள். ஆரம்பத்தில் தொந்தரவு சிறிது இருக்கும். உண்மையிலேயே அது ஒரு முயற்சி யாகும். உங்கள் சக்தி பெருகப்பெருக, பரிசுத்தத்தன்மை யிலும், பிரம்ம சிந்தனையிலும் நீங்கள் விருத்தியடைகை யில் சாதனை எளிதாகிறது. ஒற்றுமையில் ஓங்கிய வாழ்க் கையில் நீங்கள் இன்புறுகிறீர்கள். ஆத்மாவிலிருந்து சக்தி யடைகிறீர்கள். விஷய விருத்திகளெல்லாம் விளங்கியவு டன், மனம் ஒன்றித்தபின் உன் சக்தி வளருகிறது.

தியானத்தின் பொழுதுஉங்களால் எவ்வளவு நேரம் உலக எண்ணங்களிலிருந்து அகன்று நிற்கமுடிகிறது என் பதைக் கவனியுங்கள். மிகக் கவனமாக மனதைக் கண் காணியுங்கள். 20 நிமிடங்களுக்கு அது தனித்திருக்குமே யானுல் 30 அல்லது 40 நிமிடங்களுக்கு அந்நேரத்தை நீளச்செய்து, 2 அல்லது 3 மணி நேரங்களுக்குக் காலஅள வை உயர்த்த முயற்சியுங்கள். மறுபடியும் மனதைத்தெய் வீக எண்ணங்களால் நிரப்புங்கள்.

இடைவிடாத பயிற்சியினுல் மனதைக் கட்டுப்படுத்த முடியும். அதை நீங்கள் தெய்வீக எண்ணங்களால் நிரப்பு தல் அவசியம். உங்கள் முயற்சிகளைத் தலர்த்துவீர்களே யானுல், வீண் எண்ணங்கள் உடனேயே புகுந்துவிடும். இடைவிடாத பயிற்சியினுல் மனதை எளிதிலே கட்டுப்ப டுத்தமுடியும். எளிய உணவுடன்கூடிய இடைவிடாததியா னத்திலேயே சமாதி ஏற்பட வழிபிறக்கும்.

உலைக்களத்தில் ஒரு இரும்புத்துண்டை வையுங்கள். அது தீயைப்போன்று சிவப்பாகிறது. தீயிலிருந்து அதை நீக்கி விடுங்கள். அது செந்நிறத்தை இழக்கிறது. அதை செந்நிறமாகவே எப்பொழுதும் வைத்திருக்க விரும்பினுல்

தியிலேயே நீங்கள் அதை எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். இதுபோன்றே, பிரம்மஜ்ஞானத்தீயினுல் மனத்தைப்பாதுகாக்க விரும்பினுல், இடைவிடாத, ஆழ்ந்த தியானத்தினுல் பிரம்மஞானத்தீயுடன் அதை எப்பொழுதும் தொடர்புகொள்ளச் செய்ய வேண்டும். இடைவிடாத பிரம்ம ஞானத்தை நீங்கள் கொண்டிருக்கவேண்டும். பிறகு நீங்கள் சகஜ அவஸ்தையை அடைவது உறுதி.

குருபக்தியின் பெருமை.

குருவினுல் உங்கள் அனைவர் மீதும் அவரது திருவருளைச் சொரிய முடியும்; உங்களை நல்லறிவாளராக்க முடியும். அவர் கடவுளின் காணக்கூடிய பிரதிநிதியாவர். ஆனுல், நீங்கள் குருவுக்கு சேவை செய்யவேண்டும்; சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்; அவரிடம் சரணுகதி அடையவேண்டும்; விசாரணை மூலம் அவரிடமிருந்து ஆத்ம ஞானத்தையும் நீங்கள் பெறவேண்டும்.

குருபக்தி மிகவும் அவசியம். உடனேயே உங்களைக் கடவுளிடம் இட்டுச் செல்வார் குரு. சாதகன் குருவைக் கடவுளாக வழிபடவேண்டும். குரு. ஈசுவரன், பிரம்மன், ஓம், உண்மை எல்லாம் ஒன்றே. நீங்கள் குருவின் கட்டளைகளை அட்சரம் தவருது கடைப்பிடிக்க வேண்டும்.

குருவே பிரம்மன். அவரே விஷ்ணு. மஹேசுவரனும் அவரே. மானிட உருவிலுள்ள கடவுளே அவர். மேலுறையினுல் நீங்கள் அவரைச் சாதாரண மனிதனுக எண்ணிவிடக்கூடாது. குருவை சிரத்தாபக்தியுடன் நீங்கள் பணிந்தேற்றினுல், இமைப்பொழுதில் நீங்கள் ஆத்மானு

பூதியை அடைவது உறுதி.

கடவுளிடம் சிரத்தையும் குருவினிடம் பக்தியும் இல்லாத நிலையில் பிரம்மாகார விருத்தியை உயர்த்த உங்களால் முடியாது. விஷயாகார விருத்திகள் ஒடுங்கின பின்னரே சாத்துவிக மனதினில் பிரம்மாகார விருத்தி உருவாகும், அதுவும் குருவின் போதனைகளால்தான் தோன்ற முடியும். எனவே, இரவு பகலாகக் குருவுக்குச் சேவை செய்யுங்கள், இதனால் சித்த சுத்தி ஏற்பட்டு. விரைவிலேயே நீங்கள் ஆத்மானுபூதியை அடைவீர்கள்,

குருவின் உதவியின்றி எந்தவொரு சாதனையோ ஆத்மானுபூதியோ அசாத்தியம். சாதகனின் அஞ்ஞானத்தைப்போக்கி, அவனது ஞானக்கண்ணைத் திறக்கும் வல்லமை வாய்ந்தவர் குரு; எனவே குருவைக் கடவுளாக வழிபடவேண்டும். குருவுக்கும் கடவுளுக்குமிடையே வேற்றுமை பாராட்டக்கூடாது. குருபக்தியில் சிறந்தவன் சம்சார சாகரத்தைக் கடந்து அமரப் பிரம்மப்பதவியை அடைகிறான். குருபக்தியின் பெருமைதான் என்னே!

குருத்துரோகத்தினால் வரும் கேடு.

குருத்துரோகம் மாபெரும் குற்றமாகும்; கொடும் பாபமாகும். குருத்துரோகத்தில் ஈடுபடுகிறவன் வயது காலத்தில் தீராத கஷ்டங்களுக்குள்ளாவது நிச்சயம் குஷ்டரோகம், வாய் முழுவதும் புண் இன்னும் மற்றப் பிணிகளுடன் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, கவனிப்பார் யாருமின்றி, பசி தாகத்தினால் மிகவும் துள்புற்று, கடும் குளிர், கொடும்சூடு முதலிய சீதோஷ்ண நிலைகளால் பெரிதும் தாக்குண்டுச் சித்திரவதைக் குள்ளாகி மரணவஸ்தையில் பல நாட்கள் இருந்துக் கடைசியில் பரிதாப மரணமடையும் குருத்துரோகியின் ஈனநிலையை என்னென்றுரைப்பது!?

ஓம்!

ஆத்மீகத் தொண்டில்
ஆழ்ந்து ஈடுபட விரும்பும்
அன்பர்களுக்கோர் அரிய வாய்ப்பு!
யஜ்ஞத்தில் சிறந்தது ஞானயஜ்ஞம்!!
* குருபக்தி யோகம் * எது வேண்டும்?
* * கருத்து மிகும் கதைகள்!
* * * வெகுளியும் வெப்பமும்.
* சைவமும் சிவமும்!
* முருகனின் பெருமை!!
இவற்றுடன் இன்னும் பலப்பல நூல்கள்
அன்பர்களின் பேருதவியை எதிர்பார்த்து
வெளிவரக் காத்து நிற்கின்றன!!
நன்கொடையாளர் விரைந்து வாரீர்!!
''இமய ஜோதி''
ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின்
தமிழ்மொழிபெயர்ப்பு நூல்கள் அதிகமதிகம்
வெளிவர உதவ வாரீர்!!!

தங்கள் பேருதவியை வரவேற்கும்;

கி.வானமாமலை,
26, சிவபுரம்,
திருநெல்வேலி ஜங்.

மூவரின் மொழிச்சண்டை!

இராமானந்தன், கிருஷ்ண சைதன்யன், பரமேசுவர தயாள் மூவரும் சத்சிதானந்த வேதாந்த ஆசிரமத்தலைவர் பிரம்மானந்தரின் சீடர்கள். இராமானந்தன் எல்லைப்புறத்தைச் சேர்ந்தவன்; அவனுக்கு உருது தான் நன்கு தெரியும்; சிறிது ஆங்கிலமும் தெரியும். கிருஷ்ண சைதன்யன் ஆங்கிலேயன். பரமேசுவர தயாள் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். பிரம்மானந்தருக்கு மூன்று மொழிகளும் நன்கு தெரியும்.

ஒரு நாள் காலை இராமானந்தன் சுவாமி பிரம்மானந்தரிடம் சென்று 'தர்பூஸ்' (பிச்சைக்காய்) வாங்கிச் சாப்பிடுவதற்காக ஒரு ரூபாய் வேண்டும் என வேண்டி நின்றான்.

சிறிது நேரத்திற்குப் பின் பரமேசுவர தயாள் சுவாமியை அணுகி 'ஹிந்துவா' வாங்க ஒரு ரூபாய் வேண்டும் எனக் கோரி நின்றான்.

கிருஷ்ண சைதன்யன் தனக்கு 'மைலன்' வாங்க விருப்பம் என்று கூறி ஒரு ரூபாய் வாங்கிச் சென்றான்.

மூன்று பேரும் ஆசிரம வாசலில் சந்தித்துக் கடைக்குச்செல்லும் தங்களின் நோக்கத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

"நான் தர்பூஸ் வாங்கச் செல்கிறேன்", என்றான் ராமானந்தன்.

இதைக் கேட்ட கிருஷ்ண சைதன்யன் சிரித்தான். "நீர் கூறிய பெயர் கேட்பதற்குக் கூட அருவருப்பாக இருக்கிறதே! நான் 'மைலன்' சாப்பிடப் போகிறேன்,

நீயும் அதையே சாப்பிடு. அல்லது என்னுடன் கடைத் தெருவுக்கு வராதே. உனது அற்புதத் தர்பூஸை நீ சாப்பிடும்பொழுது நான் உன் அருகில் இருக்க விரும்பவில்லை'' என்றான் கிருஷ்ண சைதன்யன்.

மைலன் என்பது எலுமிச்சையின் ஒரு ரசம் என எண்ணிய பரமேசுவர தயாள் கிருஷ்ண சைதன்யனிடம் ''ஆப்கா தபியத் டீக் நஹீம்!'' என்றான்.

''ஓஹ்! டீக் ஹை!'' என்றான் கிருஷ்ண சைதன்யன்

''பின், இந்த உஷ்ணகாலத்தில் ஹிந்த்வா அச்சா ஹை'' என்றான் பரமேசுவர தயாள்.

தர்பூஸ், மைலன் அல்லது ஹிந்த்வா இவற்றுள் எது நல்லது என்பதைப் பற்றி மூவரும் வழக்காடத்தொடங்கினர். சொற்கள் கடுமையாகியது. ராமானந்தன் மற்றவர்களை உருதுவில் கடிந்து கொண்டான். கிருஷ்ண சைதன்யன் ஆங்கிலத்தில் கடிந்து கொள்ள. பரமேசுவர தயாள் கடுஞ்சொற்களை இந்தியில் அள்ளி வீசினான்!

பிரம்மானந்தர் அங்கு வந்து விரைவிலேயே விஷயத்தைப் புரிந்து கொண்டார், தமது குடிசையில் கிடந்த ஒரு பிச்சைக்காயைக் கொண்டு வந்து அவர்கள் முன் வைத்து, ராமானந்தஜீ! இதோ உங்கள் தர்பூஸ், கிருஷ்ண சைதன்யஜீ! இதோ தங்கள் மைலன். பரமேசுவர தயாள் ஜீ இதோ உங்கள் ஹிந்த்வா'', என்று கூறினர்.

உடனேயே அனைவரும் தங்கள் தவறுகளைத் தெரிந்து கொண்டு பிரம்மானந்தரின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினர்.

''நீங்கள் மூவரும் ஒரே பொருளையே வேண்டுகின்றனர்; எனினும் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறீர்கள்!

இது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு மகாரஷ்ட்ர சம்ஸ்கிருத பண்டிதர், ஒரு தமிழர், ஒரு உத்தரப் பிரதேசத்தவர், ஒரு ஆங்கிலேயர் நால்வரும் அடுத்த கட்டிடத்தின் மச்சிலில் வைக்கப்பட்டிருந்த ஒரு புட்டியில் பாலுக்காகத் தங்களுக்குள் சண்டை செய்ததை யொக்குமல்லவா? அனைவரும் அதைக் கண்டனர். அது பால் தான் என்பது அனைவருக்கும் தெரியும். மேலும் ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் கூறினர். ஒருவன் க்ஷீரம் என்ருன், இனியொருவன் பால் என்ருன் மற்ருெருவன் தூத் என்ருன். பிறிதொருவன் மில்க் என்ருன். எல்லோரும் சொன்னது சரிதான். ஒரே பொருளையே எல்லோரும் தெரிவித்தனர். எனினும் சொல்லமைப்பு வேறுபட்டிருந்தது. இதே நிலைமை தான் உங்களிடமும் நிலவி நின்றது. மேலும் இதே நிலைதான் கடவுளைக் குறித்த பல்வேறு கருத்துக்கள் கொண்ட மக்கள் சண்டையிடுவதிலும் நிலவி நிற்கிறது.

இந்துக்கள் 'பிரம்மன்' என்று பகர்வதும், முஸ்லிம்கள் 'குதா' என்றழைப்பதும், கிறிஸ்தவர்கள் 'காட்' பரமண்டலத்திலுள்ள பிதா' என்பதும் இன்னும் இது போன்ற ஏனைய மதவாதிகள் கூற்றுக்களும் ஒரே கடவுளையே குறிப்பதாகும். மௌனமாக இருங்கள். பயிற்சியில் ஈடுபடுங்கள். ஒற்றுமையை உணருங்கள்!

முனிவர்களுடன் சத்சங்கம் கொள்.

இமய ஜோதி

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின்

73-வது ஜயந்தி விழா!

4-9-59 வெள்ளிக்கிழமை முதல்
8-9-59 செவ்வாய்க்கிழமை வரை
நான்கு நாட்கள் நடைபெறும்.

........*

நெல்லை ஜங்ஷன் தருமபுர மடத்தில்

தினமும் மாலை 7-00 முதல்

திருவனந்தபுரம்

அபேதாச்சிரமத்தலைவர்:

ஸ்ரீ சுவாமி அபேதானந்த பாரதி அவர்கள்

கீதையின் 12-வது அதிகாரத்தைப்பற்றிச்

சொற்பெருக்காற்றுவார்கள்.

ஸ்ரீ சுவாமிஜீயின் இனிய சொற்பொழிவைக்

கேட்க அன்பர்கள் அனைவரும் திரண்டு வாரீர்!

நெல்லை,
15.7.59

நெல்லை தெய்வநெறிக்
கழகத்தார்.

'குரு பூஜையைப் போல ஞான யக்ஞம்'

ஸ்ரீ குருதேவ் அவர்களின் 73-வது (8-9-59) பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரின் சிறப்பு வாய்ந்த நூற்களில் ஒன்றினை 73,000 பிரதிகளை குருதேவருக்கு அன்பளிப்பாக அருள வேண்டுமென குரு தேவரின் நெருங்கிய சீடர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர். இதன் நோக்கத்திற்காக, ஜோதி - சக்தி - ஞானம் இவையடங்கிய சிறு கைப் புத்தகம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. முதல் இரண்டா, யிரம் பிரதி அச்சிட திருமதி. விக்டோரியா கோண்டாம் பில்வாகி-விஸ்-அமெரிக்கா மற்றும் பலரும் நன்கொடை அளித்துள்ளனர் இதற்கான கோர்வை வேலை ஏற்கெனவே ஆரம்பமாகியுள்ளது.

ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்களின் தொண்டர்கள் பெயருடன் ஆயிரமோ அல்லது அதற்கு மேலாகவோ பிரதிகளை அச்சிட வேண்டி அவர்தன் வசதிக்கேற்ப விரைவில் வருமாறு வரவேற்கிறோம். ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு வெளியிட விலை ரூ 300. ஆகும். ஸ்ரீ குருதேவரின் பிறந்த நாளின்போது பக்தர்கள் எவ்வளவு பிரதிகள் அவர்கள் அவர்களால் அச்சிட்டருள இயலுமோ அதற்காகவும் முன்வரலாம். உதாரணமாக 100 பிரதிகள் ரூ.40 200 பிரதிகள் ரூ. 75. 500 பிரதிகள் ரூ. 150. அல்லது 1000 ரூபா அதற்கு மேலும் தரலாம். நன்கொடையாளரின் பட்டியல் புத்தகத்தின் கடைசிப்பக்கத்தில் இடம் பெறும் இறுதி நன்கொடைத் தொகை வருமளவும் பொறுத்து பின்னரே முடிவான அச்சடிப்பு வேலை ஆரம்பிக்கப்படும். எமது எண்ணம் யாதெனின், குறுகிய கால அளவில் மிகுதியாக பிரதிகள் அச்சிட வேண்டுமென்பதே

செயலாளர்,

திவ்ய ஜீவன சங்கம், ரிஷிகேஷ்.

தாசியும் பக்தனும்.

நல்லாரிணக்கத்தினுல் ஆகாததும் உண்டோ? முன்னொரு நாள் அது ஒரு தாஸியைக் கடவுளின் சிரிய பக்தையாக்கியது.

ஒரு சிறிய நகரத்தில் ஒரு காலத்தில் பெரும் முனிவர் ஒருவர், பக்தியோகத்தில் திளைத்தவர் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு இரவும் அவர் கூட்டுக் கீர்த்தனம் நடத்தி வந்தார். நூற்றுக் கணக்கான பக்தர்கள் அதில் பங்கு பெற்று வந்தனர்.

சூதிலும் விபசாரத்திலும் மூழ்கிய ஒரு பணக்கார நாத்திகன் முனிவரின் அடுத்த வீட்டுக் காரனுக வசித்து வந்தான். சத் சங்கம், சங்கீர்த்தனத்தினுல் அவன் பெரிதும் தொந்தரவுக்குள்ளானுன். அதை நிறுத்திவிட அவன் மிக்க ஆவலாக இருந்தான்.

ஒரு திட்டம் வகுத்தான். மிகவும் அழகு வாய்ந்த ஒரு தாசியை ஏற்பாடு செய்து அந்த பக்தரை அவள் வலையில் சிக்க வைக்கத் திட்டமிட்டான். தாஸியானவள் மாலை நேரத்தில் பக்தரை அடைந்து தன்னுலான மட்டும் அவரை மயக்க முனைந்தாள். பக்தர் அசையாமல் இருந்ததோடு, சங்கீர்த்தனத்தைத் தொடர்ந்து செய்து வந்தார்,

தாசியும் விடாது பற்றி நின்ருள். அடுத்த நாள் இரவு அவள் அந்த பக்தரிடம் சென்ருள். முனிவர் அவளைக் கரம் குவித்து வரவேற்று சங்கீர்த்தனத்தைக் கேட்ட வண்ணம் சிறிது நேரம் தங்கி இருக்கச் சொன்னுர் கடைசியில் அவள் தனது துரோக எண்ணத்தைத் தெரிவித்ததும், அடுத்த நாள் வரச் சொல்லி விட்டுத் தமது

சங்கீர்த்தனத்தைத் தொடர்ந்து நடத்தலானுர்,

இரவுக்குப் பின் இரவாகப்பல நாட்கள் சென்றன; பக்தரும் சிறிதும் இணங்காமலே தன் சங்கீர்த்தனத்தைச் செவ்வெனே நடத்திவந்தார். "எனது தொடர்பை விட அதிகமான இன்பத்தைத் தரும் மற்றென்றை அவர் கட்டாயம் கண்டு பிடித்துள்ளார்! அதனுல் தான் எனது அழகையும் அவர் பாராமல் இருக்கிருர். நானும் அந்தப் பொருளைப் பெருவேன்!" என்று ஓரிரவு அந்தத் தாசித் தனக்குள் முடிவு செய்தாள், பக்தனின் கால்களில் விழுந்து விழிப்பை ஏற்படுத்த வேண்டினுள். பேரின்ப ஊற்ருன கடவுளின் திருநாம தீட்சை அளித்து, அவளை அந்த முனிவர் சிரிய பக்தையாக ஆக்கிவிட்டார்! சத்சங்கத்தின் பெருமைதான் என்னே!!

இப்பொழுதே சஞதனமுறையைக் கையாளு.

தவருமல் ஜபம், தியானம் செய்து அதன் மூலம் உன் நேரத்தை ஆனந்த மயமாகக் கழிக்க வேண்டிய காலம் இதுவே. உனக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும், சந்தர்ப்பங்களையும் கடவுள் உனக்கு அளித்திருக்கிருர். ஆகையால் அவரை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அவருக்கு நன்றி கூறு.

அவர் புகழ் பாடு. உன் குடும்பத்தாருடன் இரவில் சங்கீர்த்தனம் செய். மனே திடத்துடனிரு. முகமலர்ந்திரு அமைதியாக இரு. திருப்தியடை, நல்லவனுயிரு. தூய்மையுடனிரு. ஜாக்கிரதையாகயிரு. இப்பிறவியிலேயே ஜீவன்முக்தவனுவாய்,